பக்கங்கள் 17

மாலை முரசு

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2054 தை 20 சனிக்கிழமை 03.02.2024 அதிர்வு 187

## கெஹலியவுக்கு விளக்கமறியல்!

முன்னாள் சுகாதார அமைச்சரும் தற்போதைய சுற்றாடல்துறை அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெல எதிர் வரும் 15ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளார். 04



# சாந்தன் இலங்கை வர அனுமதிக்க வேண்டும்

## சிறீதரன், மனோ கூட்டாகக் கோரிக்கை

## சாதகமாக பரிசீலிப்பதாக ரணில் உறுதி



(எஸ்.நிதர்ஷன்)

ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்கவை இன்று நண்பகல் நேரில் சந்தித்த இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளு மன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் ஆகியோர், ராஜீவ் காந்தி கொலை வழக்கில் விடு தலை பெற்றுள்ள சாந்தனை இலங்கை வர அனுமதிக்கு மாறு கோரினார்கள்.

இந்தக் கோரிக்கையைச் சாதகமாகப் பரிசீலித்து, சாந் தன் இலங்கை வந்து 04

# சம்மாந்துறை வாகன விபத்தில் மாணவன் உடல் நசுங்கிச் சாவு!




(பாறுக் ஷிஹான், எஸ்.அஷ்ரப்கான், எம்.எம்.றம்ஸீன், எஸ்.என்.தில்சாத் பர்வீஸ்)

கன்டர் ரக வாகனம் மோதி 12 வயது மாணவன் உடல் நசுங்கிப் பலியாகியுள் ளார்.

இந்தப் பரிதாப சம்பவம் சம்மாந்துறை – அம்பாறை பிரதான வீதியில் தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் சம்மாந்துறை பிரயோக விஞ்ஞானபீடத்தின் முன்னால் இன்று இடம்பெற்றுள்ளது.

மேற்படி பல்கலைக்கழக பீடத்தின் பக்கத் திலிருந்து வீதியைக் கடந்து அடுத்த பக்கத் தில் உள்ள தமது வீட்டுக்கு சென்று கொண்டிருந்த மாணவன் மீது சம்மாந்துறை பகுதியில் இருந்து அம்பாறை நோக்கி 04

# தமிழ் இனத்துக்குச் சுதந்திரம் கிடைக்கும்வரை சுதந்திர தினத்தை துக்க நாளாக காண்பிக்குக!

## வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கம் இளைய சமுதாயத்திடம் வேண்டுகோள்

**(த.சுபேசன்)**

தமிழ் இனத்துக்குச் சுதந்திரம் கிடைக்கும்வரை இலங்கையினுடைய சுதந்திர தினம் தமிழ் மக்களுக்கான சுதந்திர தினம் அல்ல. அது எமக்கான துக்க நாள் என்பதனை இளைய சமுதாயம் தொடர்ந்தும் சர்வதேசத்துக்குக் காண்பிக்க வேண்டும்.

வடக்கு – கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத்தின் செயலாளர் திருமதி லீலாதேவி ஆனந்தநடராஜா இவ்வாறு தெரிவித்துள்ளார்.

கடந்த முதலாம் திகதி கொடிகாமத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இதனைத் தெரிவித்திருந்தார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

4ஆம் திகதி சுதந்திர தினம் மிக விமர்சையாக தென் பகுதியில் கொண்டாடப்பட இருக்கின்றது. நாம் எமது காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளைத் தேடி 2009 ஆம் ஆண்டில் இருந்து போராட்டங்களைச் செய்து வந்தாலும் கூட 2017 பெப்ரவரி 20 ஆம் திகதியில் இருந்து சுயமாக எந்தவொரு பின்புலமும் இன்றி கிளிநொச்சியில் தொடர் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகிறோம். இன்று 2500 நாள்களையும் கடந்து போராட்டம் நீண்டு



கொண்டிருப்பதன் பலனாக சர்வதேசத்துக்கும் எமது பிரச்சினை தெரிய வந்துள்ளது.

அதுமட்டுமன்றிச் சர்வதேச மனித உரிமைகள் தினம், இலங்கை சுதந்திர தினம், மகளிர் தினம், சிறுவர், முதியோர் தினம் போன்ற தினங்களிலும் கவனவீர்ப்பு போராட்டங்களை முன்னெடுத்து வருகிறோம்.

இலங்கையில் இந்த தினங்கள் பேணப்படுவதில்லை என்பதைச் சர்வதேசத்துக்குக் காண்பிக்கும் முகமாக இந்தக் கவனவீர்ப்புப் போராட்டங்களை முன்னெடுத்து வருகிறோம்.

இந்தப் போராட்டங்கள் தமிழ் மக்களால் சுய எழுச்சியுடன் மேற்கொள்ளப்பட வேண்டிய போராட்டங்கள். இருப்பினும் தமிழ் மக்கள் தாமாக இந்த போராட்டங்களை முன்னெடுப்பதில்லை. இதுவரை காலமும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத்தால் இந்த போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. இந்த முறை பல்கலைக்கழக மாணவர்கள் முன்நின்று சுதந்திர தினத்தை கரிநாளாக பிரகடனப்படுத்தி சர்வதேசத்துக்குக் காட்ட முயற்சிப்பது பாராட்டத்தக்க விடயம்.

எமது வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத்தால் தொடர்ந்து இவ்வாறான போராட்டங்களை முன்னெடுக்க முடியாத நிலை காணப்படுகிறது.எமது உடல் நிலைமையும் அதற்கு ஒத்துழைக்காது. நாம் எமது வாழ்நாளை விரல் விட்டு எண்ணிக் கொண்டிருக்கிறோம்.

எனவே பல்கலைக்கழக மாணவர்களின் முயற்சிக்கு ஆதரவு வழங்கி இலங்கையினுடைய சுதந்திர தினம் தமிழ் மக்களுக்கானது அல்ல என்பதனை உணரச் செய்வோம்.

பல்கலைக்கழக மாணவர்கள் மட்டுமல்லாது இளைய சமுதாயம் அனைவருமே இதனை உணர வேண்டும். ஒட்டுமொத்த தமிழ் மக்களும் இந்தச் சுதந்திர தினம் எமக்கானது அல்ல என்பதை உணர வேண்டும்.–என்றார்.

# பன்முகப்பட்ட வரவு - செலவுத் திட்ட அபிவிருத்தி தொடர்பில் ஆராய்வு!

**(அஸ்ஹர் இப்றாஹிம்)**

பன்முகப்படுத்தப்பட்ட வரவு – செலவுத் திட்ட நிதி ஒதுக்கீட்டைச் செயற்படுத்தும் நோக்கில் கிராமங்களுக்கு நேரடியாகச் சென்று அவர்களின் முக்கிய தேவைப்பாடுகளை கேட்டறியப்பட்டுள்ளது.

இந்த நிலையில் முசலி பிரதேச செயலர் பிரிவில் உள்ள 20 கிராம சேவையாளர் பிரிவுகளை உள்ளடக்கிய வகையில் பண்டாரவெளி, வேப்பங்குளம், அரிப்பு, அகத்திமுறிப்பு, சிலாபத்துறை, கொண்டச்சி ,முள்ளிக்குளம், மரிச்சுக்கட்டி ஆகிய பகுதிகளில் உள்ள பொது அமைப்புகளுடனான கலந்துரையாடல் கிரா மிய பொருளாதார இராஜாங்க அமைச்சர்கள் காதர் மஸ்தான் தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வுகளில் குறிப்பிட்ட பிரதேச முக்கியஸ்தர்கள் கலந்து கொண்டனர்.







# திருகோணமலையில் இடம்பெற்றுள்ளது 'நமது தேசிய வீரர்களுடன் ஒரு தருணம்'

(ஹஸ்பர்)

இலங்கையின் சுதந்திர தினத்தை முன்னிட்டு திருகோணமலை மாவட்ட அரச அதிபர் சாமிந்த ஹெட்டியாரச்சி தலைமையில் 'நமது தேசிய வீரர்களுடன் ஒரு தருணம்' எனும் தொனிப்பொருளில் நிகழ்வானது நேற்று (02) திருகோணமலை மாவட்ட செயலக பிரதான மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

இதில் 1948 ஆம் ஆண்டு இலங்கையின் சுதந்திரத்துக்கு முன்னோடியாக இருந்த தேசிய வீரர்களைப் பற்றிய சுருக்கமான அறிமுகம் இடம்பெற்றது. தனிநபர்களாக நாம் வெற்றியடைய வேண்டிய பண்புகள் தொடர்பில் மாவட்ட அரச அதிபரால் எடுத்துரைக்கப்பட்டது.

76 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு சிறப்பிக்கும் முகமாக மாவட்டச் செயலக வளாகத்தில் மரக்கன்று ஒன்றையும் மாவட்ட அரச அதிபர் நட்டு வைத்தார்.



இந்த நிகழ்வில் மாவட்ட மேலதிக அரச அதிபர் ஜே.எஸ்.அருள்ராஜ், மாவட்ட மேலதிக அரச அதிபர் (காணி) எஸ்.சுதாகரன், மாவட்ட செயலக பதவி நிலை அதிகாரிகள், மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள் மற்றும் மாவட்ட செயலக அனைத்து ஊழியர்களும் கலந்து கொண்டனர்.





# சுதந்திர தினத்தை முன்னிட்டு மரம்நடுகை

(அஸ்ஹர் ஆதம்)

சுதந்திர தினத்தை முன்னிட்டு சாய்ந்தமருது பிரதேச செயலகமும் சாய்ந்தமது அல்-ஜலால் வித்தியாலயமும் இணைந்து ஏற்பாடு செய்த மரநடுகை நிகழ்வு அல் -ஜலால் வித்தியாலயத்தில் நடை பெற்றது.

பிரதேச செயலாளர் எம்.எம்.ஆசிக் மற்றும் வித்தியாலய அதிபர் எம்.ஐ.எம். சைபுடீன் ஆகியோரின் வழிகாட்டலில் இடம் பெற்ற இந்த நிகழ்வில் திட்டமிடல் உதவிப் பணிப்பாளர் கே.எல்.ஏ.ஹமீட் பிரதேச செயலக கிராம நிர்வாக உத்தியோகத்தர் எம்.எஸ்.எம்.நளீர், திட்டமிடல் சிரேஷ்ட அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.பி.எம்.அஸ்ஹர், பிரதி அதிபர் ரீ.கே.எம்.சிராஜ், உதவி அதிபர் எம்.ஏ.எம்.சிறாஜ், சுற்றாடல் முன்னோடி வலய மட்ட ஆணையாளர் ஏ.றாசிக், சாய்ந்தமருதுக் கோட்ட சுற்றாடல் ஆணையாளர் ஏ. சியாம், உணவுப் பாதுகாப்பு மற்றும் போஷாக்குக்குப் பொறுப்பான அபிவிருத்தி உத்தியோகத்தர் எச்.எம்.எம்.டில்ஷாத், விவசாய அபிவிருத்தி உத்தியோகத்தர்களான ஐ.சிபானி, ஜெனீஸா, றினோஸா மற்றும் பிரதேச செயலக சுற்றாடல் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், கல்முனை ஸாஹிறா தேசிய பாடசாலையின் ஜனாதிபதி பதக்க, சுற்றாடல் முன்னோடி மாணவர்கள், அல்-ஜலால் வித்தியாலய சுற்றாடல் முன்னோடி மாணவர்கள், ஆசிரியர்கள் பலரும் கலந்து கொண்டனர்.




# வடக்கு மாகாண அரச சாரதிகள் சங்கம் தொழிற்சங்கப் போராட்டத்தில் குதிப்பு

(எஸ்.நிதர்ஷன்)

எதிர்வரும் 5ஆம் திகதி தொடக்கம் 10 ஆம் திகதி வரை தொடர் தொழிற் சங்கப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாக வடக்கு மாகாண அரச சாரதிகள் சங்கம் அறிவித்துள்ளது.

யாழ். ஊடக அமையத்தில் இன்று நடத்திய ஊடக சந்திப்பின் போதே வடக்கு மாகாண அரச சாரதிகள் சங்கத் தின் பிரதிநிதிகள் இவ்வாறு அறி வித்தலை விடுத்துள்ளனர்.

வடக்கு மாகாண அரச சாரதிகள் சங்கத்தின் தலைவர் த.துசாந், செயலா ளர் எஸ்.சுதர்சன், பொருளாளர் இ.வரத குமார் மற்றும் வடக்கு மாகாண அரச சாரதிகள் சங்கத்தின் முல்லைத்தீவு மாவட்ட இணைப்பாளர் இ.தயாபரன் ஆகியோர் மேற்படி ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துக்களை வெளி யிட்டுள்ளனர்.

அவர் மேலும் கூறுகையில்,

"வடக்கு மாகாணத்தின் ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் கடந்த காலத்தில் ஆளுநராக இருக்கும்போது வடக்கு மாகாண அரச சாரதிகளுக்கு உரிய முறையில் இடமாற்றம் வழங்கப்பட வேண்டும் என ஆர்வமாக இருந்த போதிலும் தற்போது ஆளுநராலேயே இது இடைநிறுத்தப்பட்டுள்ளது. இந் நிலையில், அனைவரும் கூடி தொழிற் சங்க நடவடிக்கைக்குச் செல்லத் தீர் மானத்துள்ளோம்.

கடந்த ஜனவரி மாதமே தொழிற்சங்க நடவடிக்கைக்குச் செல்ல முற்பட்ட போது ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையைக் கருத்தில்கொண்டு அந்த மாதம் நாம் தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடு படவில்லை .

இந்நிலையில், இந்த மாதம் (பெப்ர வரி ) 5 ஆம் திகதி முதல் 10 திகதி வரை தொடர் தொழிற்சங்க நடவடிக் கைகளில் ஈடுபடத் தீர்மானித்துள் ளோம்." – என்றார்.



## சுதந்திர தினத்தை முன்னிட்டு

# 600 கைதிகள் நாளை விடுதலை

இலங்கையின் 76 ஆவது தேசிய சுதந்திர தினத்தை முன்னிட்டு, ஜனாதிபதியின் விசேட பொது மன்னிப்பின் கீழ் 600 கைதிகள் விடுதலை செய்யப்படவுள்ளனர்.

அதன்படி, நாடளாவிய ரீதியில் சிறையில் உள்ள 600 கைதிகள் நாளை விடுதலை செய்யப்படவுள்ளனர் என்று சிறைச்சாலைகள் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

அரசமைப்பின் 34 ஆவது பிரிவின் மூலம் ஜனாதி பதிக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி, இந்தப் பொது மன்னிப்பு வழங்கப்படுகின்றது.

# ரயில் மோதி குடும்பஸ்தர் உயிரிழப்பு!

கிளிநொச்சியில் பாதுகாப்புக் கடவையைக் கடக்க முற்பட்ட குடும்பஸ்தர் ரயிலில் மோதுண்டதில் பலியாகி யுள்ளார்.

இந்த விபத்து நேற்று வெள்ளிக்கிழமை மாலை 5 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

கிளிநொச்சி டிப்போ வீதியில் ரயில் நிலையத்துக்கு அண்மித்துள்ள பாதுகாப்பான ரயில் கடவை மூடப்பட்ட நிலையில், குறித்த கடவையைக் கடக்க முற்பட்ட வரையே ரயில் மோதியுள்ளது.

விபத்தில் மோட்டார் சைக்கிளில் ரயில் கடவையைக் கடக்க முயன்ற விநாயகர்புரத்தைச் சேர்ந்த 5 பிள்ளைக ளின் தந்தையான மதன் என்பவரே உயிரிழந்துள்ளார்

இந்தச் சம்பவம் தொடர்பில் கிளிநொச்சி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**சாந்தன் இலங்கை...**

தன் வயதான தாயாரைச் சந்திக்கும் வாய்ப்பை ஏற்படுத்தித் தருவதாக ஜனா திபதி உறுதியளித்துள்ளார்.

இது தொடர்பான அடுத்தகட்ட நடவடிக் கைகளை மேற்கொள்ளுமாறு தேசிய பாதுகாப்புக்கான ஜனாதிபதி ஆலோச கர் சாகல ரத்னாயக்கவுக்கு, சந்திப்பின் போதே ஜனாதிபதி பணிப்புரை விடுத் துள்ளார்.

சாந்தனின் தாயாரின் கோரிக்கைக் கடிதம் மற்றும் மேலதிக தகவல்களைத் தருமாறும் சிறீதரன் எம்.பியிடம் ஜனாதி பதி கோரியுள்ளார்.

**கெஹலியவுக்கு...**

குற்றப் புலனாய்வுத் திணைக்களத் தினரால் நேற்றிரவு கைது செய்யப்பட்ட கெஹலிய ரம்புக்வெல, கொழும்பு – மாளிகாகந்த நீதிவான் நீதிமன்றத்தில் இன்று முற்படுத்தப்பட்டார். இதன்போதே விளக்கமறியல் உத்தரவு பிறப்பிக்கப் பட்டுள்ளது.

சர்ச்சைக்குரிய தரமற்ற மருந்து இறக்குமதி தொடர்பிலேயே அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

**சம்மாந்துறை...**

வந்த மோதியலில் அவர் சம்பவ இடத் திலேயே சாவடைந்துள்ளார்.

இதன்போது சம்மாந்துறை பிரதான வீதி, உடங்கா 02 இல் வசிக்கும் ஏ.எம். பாஸீர் (வயது 12) எனும் மாணவனே உயிரிழந்துள்ளார். கன்டர் ரக வாகனத் தைச் செலுத்தி வந்த சாரதி கைது செய் யப்பட்டுள்ளார்.

விபத்துக்குள்ளான வாகனம் சம்மாந் துறை பொலிஸ் நிலையத்தில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

மரணமடைந்த மாணவனின் உடல் சம்மாந்துறை ஆதார வைத்திய சாலையில் வைக்கப்பட்டுள்ளது.

மேலதிக விசாரணைகளை சம்மாந் துறை பொலிஸார் மேற்கொண்டு வரு கின்றனர்.



# ஜம்பு நிலக்கடலைச் செய்கையை ஊக்குவிக்க விவசாய உபகரணம்

## அம்பாறை அரச அதிபர் சிந்தக வழங்கினார்!

(வி.ரி.சகாதேவராஜா)

விவசாய நவீன மயமாக்கல் திட்டத்தின் கீழ் ஜம்பு நிலக் கடலை பயிர்ச்செய்கை நடவடிக்கையினை ஊக்குவிக்கும் பொருட்டு ஐரோப்பிய யூனியன் நிதிப்பங்களிப்புடன் செயற்படுத்தப்பட்டு வரும் வேலைத்திட்டத்தின் கீழ் திருக்கோவிலில் தெரிவு செய்யப்பட்ட 88 பயனாளிகளுக்கு விவசாய உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

திருக்கோவில் பிரதேச செயலகத்தில் பிரதேச செயலாளர் தங்கையா கஜேந்திரன் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

பிரதம அதிதியாக அம்பாறை அரச அதிபர் சிந்தக அபேவிக்ரம கலந்து கொண்டு தெரிவுசெய்யப்பட்டுள்ள பயனாளிகளுக்கு உபகரணங்களை வழங்கினார்.

இந்த நிகழ்வில் உதவி பிரதேச செயலாளர் திருமதி எஸ்.நிருபா, கிழக்கு மாகாண விவசாய திணைக்களத்தின் பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் ஆர். ஞானச்செல்வம், கிழக்கு மாகாண விவசாய திணைக்களத்தின் விவசாய விஞ்ஞானி ஏ.அருணந்தி, நிர்வாக உத்தியோகத்தர் ரி.மோகனராஜா, கிராம சேவைக்கு பொறுப்பான நிருவாக உத்தியோகத்தர் என்.கந்தசாமி, திட்டத்துக்கான கள உத்தியோகத்தர்கள், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், கிராம உத்தியோகத்தர்கள், பயனாளர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.



# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


# கோட்டை விடும் ரணில்

கிடைத்த வாய்ப்பைச் சரிவரப் பயன் படுத்துவதுதான் அரசியல். அது ஒரு கைதேர்ந்த கலை.

அந்தக் கலையை சரியாகப் பிரயோகிக்கத் தெரியாதவராக தடுமாறுகின்றார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.

நாட்டை மாறி மாறி ஆட்சி புரிந்த - பழமை யான - ஒரு பெரிய கட்சியின் தலைவராகக் கால் நூற்றாண்டுக்கு மேல் கோலோச்சியையும் கூட, நாட்டின் தலைவராக வர முடியாத துரதிர்ஷ்டம் - துர்ப்பாக்கியம் - அவருக்கு நீடித்தது.

2005இல் அந்த வாய்ப்பு அவருக்குக் கிட்டிய போது, விடுதலைப் புலிகளைக் கையாள்வதில் - அவர்களுடன் சமரசம் செய்வதில் - இறுமாப் புடன் நடந்து, அந்த வாய்ப்பைக் கோட்டை விட்டு, காலகதியில் நாட்டின் அரசியல் குப் பைக் கூடைக்குள் தூக்கி வீசப்படும் நிலை மைக்குச் சென்றார்.

கடைசியில், 'சரஸ்வதி சபதம்' படத்தில் வீதியில் பிச்சை எடுத்துத் திரிந்த மாது, பட்டத்து யானை மாலை போட்டமையால் பட்டத்து ராணியானமை போன்று, கட்சியின் சார்பில் ஒரே ஒரு எம்.பியாகக் கிடைத்த தேசியப் பட்டியல் மூலம் நாடாளுமன்றுக்குள் நுழைந்து, அச்சமயம் நாட்டை விட்டு ஓடும் இக்கட்டில் சிக்கிய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் பார்வை தம் மீது விழுந்தமையால் ஜனாதிபதி யானார் ரணில் விக்கிரமசிங்க.

அந்த அதிர்ஷ்ட வாய்ப்பைச் சரிவரப் பயன் படுத்தினால், 2024க்குப் பின்னரும் ஐந்து ஆண் டுகள் - இன்னொரு தடவை - அவர் நிறை வேற்று அதிகார ஜனாதிபதி பதவியில் நீடிக்க முடியும். கடைசியில், ஐம்பது ஆண்டுகால அரசியல் வாழ்வின் பின்னராவது, ஒரு தடவை யேனுன் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட நாட்டின் தலைவர் என்ற பெயரைப் பெற்று விட முடியும். ஆனால் கிடைத்த வாய்ப்பை - சந்தர்ப்பத்தை - சரிவரப் பயன்படுத்துபவராக அவர் தென்படவில்லை. மாறாக, போட்ட டித்துக் குழப்பி, தம் தலையில் தாமே மண்ணள் ளிப் போடுபவராகவே அவர் தென்படுகின்றார்.

விழுந்து கிடக்கும் நாட்டின் பொருளா தாரத்தைத் தூக்கி நிறுத்த ஒரு வழிப் பண் ணினார், சர்வதேச நாணய நிதியத்திடம் சரண் புகுந்து, அதன் நிபந்தனைகளைப் பூர்த்தி செய்து, நாட்டின் நாளாந்த நெருக்கடி நிலை மைக்கு ஒரு வழிகண்டார் என்பவையெல்லாம் உண்மைதான். ஆனால் ஒரு தடவையாவது நாட்டின் தலைவராக மக்கள் அவரைத் தேர்ந் தெடுத்தனர் என்ற நிலையை உருவாக்கும் விதத்தில் மக்கள் தலைவராகும் வாய்ப்பை அவர் சரிவரப் பயன்படுத்துபவராகத் தெரிய வில்லை.

தேசிய ரீதியில் நடைபெற்றிருக்க வேண்டிய உள்ளூராட்சித் தேர்தலை வேட்பு மனுக்கள் கோரப்பட்டு, அவை ஏற்கப்பட்டு, பிரசாரங்கள் ஆரம்பிக்கப்பட்டு, வாக்குச்சீட்டுகளும் கணிசமான அளவு அச்சிடப்பட்ட பின்னர் குறுக்கு வழியில் அதற்கு ஆப்படித்துத் தனது ஜனநாயக விரோத பண்பியல்பை - தேர்தலைக் கண்டால் தொடை நடுங்கும் தன் போக்கை - மக்கள் முன் அம்பலப்படுத்தினார்.

ஜனாதிபதி தேர்தலுக்கு இன்னும் எட்டு மாதங்களே உள்ளன. இந்தச் சமயத்தில் அரசி யல் கட்சிகளும், அமைப்புகளும் மக்களின் முன் வீதிக்கு வருவது இயல்பு. அப்படி வீதிக்கு வரும் அமைப்புகள் மற்றும் கட்சிகளுக்கு எதிராக பொலிஸாரை இறக்கி, கண்ணீர்ப் புகைக் குண்டுகள் வீசி, நீர்த்தாரைப் பிரயோகம் செய்து, அவற்றைக் கலைத்துத் தனது ஜனநாயக விரோத எதேச்சாதிகார முகத்தை வலிந்து அம்பலப்படுத்துகின்றார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.

பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி கடந்த 30 ஆம் திகதி பிற்பகல் கொழும்பில் நடத்திய பேரணி மீது பொலிஸார் மேற் கொண்ட அடாவடித்தனம் தொடர்பான விவ காரம் உயர் நீதிமன்றத்தின் முன் போக விருக்கின்றது. சட்ட ஆய்வுக்கு அது உட்படும் அதேசமயம், மக்கள் மன்றிலும் - மனதிலும் - அது காத்திரமான தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதும் கண் கூடு.

அந்தப் பேரணியையொட்டி பொலிஸ் சட்ட ரீதியாக வாங்கிய நீதிமன்றத் தடை உத்த ரவை மீறாமல், நீதிமன்றம் தடை விதித்த வீதிகளைத் தவிர்த்தே ஐக்கிய மக்கள் சக்தி பேரணியாகச் சென்றது. அதன் மீது திடீர்த் தாக்குதலைப் பொலிஸார் நடத்தி, அந்த மக் களின் ஜனநாயக வெளிப்பாட்டு உரிமையை - நடவடிக்கையை - அரச வன்முறை மூலம் தடுத்தனர் என்ற மனப்பதிவே இப்போது மக்களுக்கு ஏற்பட்டுள்ளது.

மக்களின் ஜனநாயக ரீதியான கருத்தியல் வெளிப்பாட்டு சுதந்திரத்தை அரச அதிகாரம் கொண்டு - பொலிஸ் மற்றும் முப்படை வலி மையைப் பிரயோகித்து அடக்கும் எதேச் சாதிகாரியே தாம் என்பதை மக்களின் முன் நிரூபித்துக் காட்டும் வேலையையே ரணில் முன்னெடுக்கின்றார்.

பதவிக்கு வந்த இந்த ஒன்றரை ஆண்டு காலத்துக்குள் இனப் பிரச்சினைக்கான தீர்வு என்ற பெயரில் அவர் முன்னெடுத்த தேவை யற்ற நடவடிக்கைகள், ஆர்ப்பாட்ட அறிவிப் புகள், தீர்மானங்கள் போன்றவை சிறுபான்மை யினருக்கு அவர் மீது நம்பிக்கையைத் தரவே யில்லை. தங்களுக்கு நியாயம் செய்யும் நடு நிலையாளராகச் செயல்பட மறுத்து, தன்னு டைய அதிகாரத்தைத் தக்க வைப்பதற்காக நீதியற்ற முறையில் பேரினவாதம் பக்கம் சாயும் வழமையான இனவாதத் தலைவரே தாம் என்பதை சிறுபான்மையினர் மனதில் உறுதிப்படுத்தும் விடயங்களையே அவர் இப்போது ஆற்றி வருகின்றார்.

ராஜபக்ஷக்களை அரவணைத்தவாறு தொடரப்போகும் தனது அரசியல் பயணத் தினால், இப்போது மீண்டும் கிடைத்த வர லாற்று வாய்ப்பை திரும்பவும் ஒரு தடவை போட்டடித்துக் கோட்டை விட்டுத் தோற்றுப்போன அரசியல்வாதியாகவே சரித்திரம் அவரைப் பதிவு செய்யப் போகின்றது என்பது திண்ணம்.



# மட்டக்களப்பில் படகுச் சவாரி!

(பழுவூரான்)

மட்டக்களப்பு காந்திபூங்கா அருகில் படகுச் சேவையொன்று அண்மையில் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

இந்தப் படகுச் சேவை ஊடாக மட்டக்களப்பில் உள்ளூர் மற்றும் வெளியூர் சுற்றுலாப் பயணிகளின் வருகையை அதிகரிக்கக் கூடியதாக இருக்குமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சேவை மட்டக்களப்பு காந்திப் பூங்காவுக்கு முன்பாக உள்ள வாவியில் ஆரம்பித்து, யானை விழுந்த கல் ,கொக்குத்தீவு வெளிச்சவீடு வரை சென்று மீண்டும் காந்திப் பூங்கா வளாகத்தை வந்தடையும்.

இந்தப் படகுச் சேவையில் பயணிக்கத் தினமும் பெரும் எண்ணிக்கையான மக்கள் சவாரி செய்து வருகின்றனர்.



# கிழக்கில் விவசாய உற்பத்தியை அதிகரிக்க விழிப்புணர்வுத் திட்டம்

## ஆளுநர் செந்தில் தொண்டைமான் ஆரம்பித்து வைத்தார்

(நூருல் ஹுதா உமர்)

கிழக்கு மாகாணத்தின் விவசாய உற்பத்திகளை அதிகரிப்பதற்கான விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டத்தை கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் ஆரம்பித்து வைத்தார்.

இந்த நிகழ்வில் திருகோணமலை மாவட்ட விவசாயிகளுக்கு விவசாயத்தில் நவீன தொழில்நுட்பம் குறித்து சிறப்பு பயிற்சி அளிக்கப்பட்டது.

இயற்கை விவசாய விஞ்ஞானி ஸ்ரீ பாமயன், இயற்கை விவசாய ஆலோசகர ஸ்ரீ ராஜா கணேஷ் ஆகியோருடன் விவசாய அமைச்சு இணைந்து விவசாயிகளுக்கு, அவர்களின் விளைச்சலை அதிகரிக்க ஆலோசனைகள் வழங்கியமை குறிப்பிடத்தக்கது.






# பெண் தலைமைக் குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகள் கையளிப்பு!

(பழுவூரான்)

பிரித்தானியாவில் வசிக்கும் சமூக செயற்பாட்டாளர் ஒருவரின் நிதி அனுசரணையில் வெட்டுக்காடு மற்றும் இருதயபுரம் கிழக்கில் வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட பெண்கள் தலைமை தாங்கும் 50 குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகள் மண்முனை வடக்குப் பிரதேச செயலகத்தில் வைத்து வழங்கப்பட்டன.

மட்டக்களப்பு மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் வ.வாசுதேவனின் தலைமையின் இந்த நிகழ்வு நடைபெற்றது.

உதவிப் பிரதேச செயலாளர் சியாவுல் ஹக்கிராம சேவை உத்தியோகத்தர் மற்றும் நிவாரணத்துடன் சம்பந்தப்பட்ட பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், ஆதித்தி கைத்தறி நெசவு தொழிற்சாலை நிறுவுனர் திருமதி கீதா சுதாகரன், ஹெல்ப் எவர் தன்னார்வ நிறுவனத்தின் பணிப்பாளர் கீர்த்தனன் மற்றும் நிறுவன அங்கத்தவர்கள், மட்டக்களப்பின் சமூக வலைத்தள செயல்பாட்டாளர் சஜீத்நாத் உட்படப் பலர் கலந்துகொண்டனர்.



# தம்பலகாமம் பிரதேச செயலகத்தில் பதிவாளர் பிரிவு நடமாடும் சேவை

(ஹஸ்பர்)

பிறப்பு, இறப்பு மற்றும் திருமண பதிவுகள் தொடர்பான நடமாடும் சேவை தம்பலகாமம் பிரதேச செயலகத்தில் இடம் பெறவுள்ளது.

தம்பலகாமம் பிரதேச செயலாளர் திருமதி ஜெ.ஸ்ரீபதியின் வழிகாட்டுதலுக்கு அமைய "புதிய கிராமம்- புதிய நாடு"எனும் தொனிப் பொருளின் கீழ் இந்த நடமாடும்சேவை இடம்பெறவுள்ளது.

எதிர்வரும் 08 ஆம் திகதி தம்பலகாமம் பிரதேச செயலக மண்டபத்தில் காலை 9 மணி தொடக்கம் மாலை 4.30 மணி வரை நடமாடும் சேவை இடம் பெறவுள்ளது.



இதில் பிறப்பு, இறப்பு, திருமண பதிவுச் சான்றிதழ்கள் இல்லாதவர்களுக்காக சான்றிதழ்களை பெற்றுக் கொடுத்தல் மற்றும் தேசிய அடையாள அட்டை சிக்கல்களை தீர்த்தல்,காணிப் பிரச்சினைகளுக்கான தீர்வுகளை பெறல் என பல சேவைகளை பொது மக்கள் அன்றைய தினம் பெற்றுக் கொள்ள முடியும். எனவே பொது மக்கள் கலந்து கொண்டு பயன்பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள்.



# பாதுகாப்பான புலம்பெயர்வு தொடர்பில் விழிப்புணர்வு

(ஹஸ்பர்)

மனிதவள திணைக்களத்தின் ஏற்பாட்டில் திருகோணமலை பிரதேச செயலகம் மற்றும் திருகோணமலை நகர சபையின் பொது நூலகம் என்பன இணைந்து இளைஞர்களுக்கான பாதுகாப்பான புலம் பெயர்வு தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வை நடத்தியுள்ளன.

சர்வதேச புலம் பெயர்தலுக்கான அமைப்பின் மூலம் திருகோணமலை நகரசபை பொது நூலக மண்டபத்தில் இந்த நிகழ்வு இடம் பெற்றது.

திருகோணமலை நகர சபையின் செயலாளர் வெ. இராஜசேகர் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், பட்டணமும் சூழலும் பிரதேச செயலக மனிதவள அபிவிருத்தி உத்தியோகத்தர் தெ. புரபானந்தன் கருத்துரைகளை வழங்கினார்.

நிகழ்வில் திருகோணமலை நகர சபையின் நிர்வாக உத்தியோகத்தர் என் . பரமேஸ்வரன், பிரதம நூலகர் நா . யோகேஸ்வரன், நூலகர் நிம்சானா, நூலக உதவியாளர்களான உ.ரஜனிக்காந்தன், அ.அச்சுதன் உட்பட பலர் கலந்துகொண்டனர்.



# தனமல்வில பொலிஸ் பிரிவில் பச்சை நிறத்தில் ஐஸ் போதை!

(அஸ்ஹர் இப்றாஹிம்)

தனமல்வில, அங்குணுகொல பெஸ்ஸ பகுதியிலுள்ள வீடொன்றிலிருந்து பச்சை நிற ஐஸ் போதைப் பொருளுடன் 63 வயதான பெண்ணொருவர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளார் என்று தனமல்வில பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தனமல்வில பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிபபடையில் அங்குணுகொலபெஸ்ஸ பகுதியிலுள்ள சூரியாறு பிரதேசத்திலுள்ள வீடொன்றை சோதனையிட்ட போது இந்தப் பெண் கைது செய்யப்பட்டுள்ளார்.

அலுமாரியொன்றில் மிகவும் சூட்சுமமான முறையில் மறைத்து வைத்திருந்த 571 மில்லி கிராம் பச்சை நிற ஐஸ் போதைப் பொருள் மீட்கப்பட்டுள்ளது என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட பெண், வெல்லவாய நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டுள்ளார் என்றும் மேலதிக விசாரணைகளை தனமல்வில பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# இந்தியாவின் 75 ஆவது குடியரசு தின நிகழ்வுகளை முன்னிட்டுக் கலைநிகழ்வு

இந்தியாவின் 75 ஆவது குடியரசு தினத்தை முன்னிட்டு, யாழ்ப்பாணம் கலாச்சார மையத்தில் கடந்த முதலாம் திகதி ஸ்மதி நம்ரதா மேத்தா தலைமையிலான இந்திய நடனக் கலைஞர்கள் குழு ஒடிசி, கதகளி, மணிப்பூரி மற்றும் ஷத்ரியா ஆகிய நான்கு பாரம்பரிய இந்திய நடன வடிவங்களை நிகழ்த்தியது.

இந்திய கலாச்சார உறவுகள் தூதரகத்துடன் இணைந்து இந்திய ஆலோசகர் ஜெனரல் இந்த நிகழ்வை ஏற்பாடு செய்தார்.

கன்சல் ஜெனரல் ராகேஷ் நட்ராஜ் தனது தொடக்க உரையில், இந்த நடன வடிவங்கள் இந்தியாவின் ஒவ்வொரு பகுதியையும் பிரதிநிதித்துவப்படுத்துகின்றன என்று குறிப்பிட்டார்.

இது அதையும் தாண்டி இந்திய கலை மற்றும் கலாச்சாரத்தின் முழுமையான வரலாற்றை முன்வைக்கிறது. ஒடிசி நடனம் வட இந்தியாவின் கோயில்களில் நிகழ்த்தப்படும் சடங்கு நடனங்களில் இருந்து அதன் தோற்றத்தைக் குறிக்கிறது, கதகளி, தென்னிந்திய மாநிலமான கேரளாவில் இருந்து நன்கு அறியப்பட்ட பகட்டான நடன நாடகம், மணிப்பூரி, வடகிழக்கு இந்தியாவின் மணிப்பூரின் நடன வடிவமாகும், மேலும் ஷத்ரியா அசாமின் பாரம்பரிய நடன வடிவம் என்றார்.

இந்தியாவில் இருந்து வரும் நடன வடிவங்கள் பாரம்பரியமாக கருதப்படாமல், பன்முகத்தன்மை மற்றும் மக்களின் கலாச்சார வாழ்க்கையின் ஒரு பகுதியாக மாறியதன் காரணமாக அவை பாரம்பரியமாக கருதப்படுகின்றன என்றும் குறிப்பிட்டார்.

யாழ்ப்பாணம் கலாசார நிலையத்தில் நடைபெற்ற நடன நிகழ்வில் 500 இற்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு கலாசார நிகழ்ச்சிகளை கண்டுகளித்தனர். இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர்கள், மதத் தலைவர்கள், துணைத் தூதரக அதிகாரிகள் மற்றும் முக்கியஸ்தர்கள் கலந்துகொண்டனர்.









# விவசாயிகளின் பிரச்சினைகள் தொடர்பில் கலந்துரையாடல்

(ஹஸ்பர்)

திருகோணமலை மாவட்டத்தின் மொறவெவ பிரதேச செயலாளர் ஆ.நவேஸ்வரன் தலைமையில் திட்ட மேலாண்மை குழு கூட்டம் மொறவெவ பிரதேச செயலக ஒன்றுகூடல் மண்டபத்தில் நடைபெற்றது.

விவசாயிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில் மொறவெவ உதவி பிரதேச செயலாளர் சத்யப்பிரியா, நீர்ப்பாசன திணைக்கள பொறி யியலாளர், விவசாய அபிவிருத்தி உத்தி யோகத்தர்கள் மற்றும் விவசாய சம்மேளன பிரதிநிதிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



# வாக்காளர் தின விழிப்புணர்வு நிகழ்வுகள் மட்டக்களப்பில்!

(பழுவூரான்)

தேர்தல்கள் திணைக்களத்தின் மட்டக்களப்பு மாவட்ட அலுவலகத்தின் ஏற்பாட்டில் 16 வயதுக்கு மேற்பட்ட பிரஜைகளைத் தேருநர் இடாப்பில் பதிவு செய்வது தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வு கடந்த வியாழக்கிழமை (01) தனியார் கற்கை நிலையம் ஒன்றில் இடம்பெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட உதவி தேர்தல் ஆணையாளர் சுபியான் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க, மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் திருமதி ஜஸ்டினா முரளிதரன் ஆகியோர் அதிதிகளாகக் கலந்து கொண்டனர்.

இதன் போது மாணவர்களுக்கு வாக்களித்தலின் பலத்தையும், அதன் தாற்பரியம் தொடர்பாகவும் அதிதிகளினால் விவரிக்கப்பட்டது.



நாட்டில் புதிய வருடம் தேர்தல் ஆண்டாக அறிவிக்கப்பட்டுள்ளதால் தேர்தல்கள் திணைக்களத்தால் இந்த முறை வாக்காளர் தினத்தை முன்னிட்டு கிழக்கு மாகாணத்தின் பிரதான நிகழ்வு மட்டக்களப்பு மாவட்டத்தில் இடம்பெற்றது.

இளம் பிரஜைகளை நிகழ்நிலை இணைய வழி ஊடாக தேர்தல் டாப்பில் பெயர்களை இணைக்கும் முகமாக இந்த விழிப்புணர்வு நிகழ்வு மட்டக்களப்பு மாவட்டத்தில் இடம்பெற்றமை விசேட அம்சமாகும்.

இதன் ஒரு கட்டமாக இளம் பிரஜைகளை எதிர்கால தேர்தலுக்கு தயாராக்கும் வகையில் “நானும் வாக்களிக்க தயாராகி விட்டேன்” எனும் கருப்பொருளுக்கு அமைய பிரதம அதிதிகளால் கைப்பட்டி அணிவிக்கப்பட்டு, தேர்தலின் முக்கியத்துவம் சம்பந்தமான விழிப்புணர்வுத் துண்டு பிரசுரங்களும் இங்கு வழங்கப்பட்டன.




# ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மகளிர் கிளைகள் புனரமைப்பு

(நூருல் ஹுதா உமர்)

கல்முனை பிரதேசத்தில் 16 ஆம் வட்டாரத்தில் கல்முனை- 10,11,12 ஆம் கிராம சேவகர் பிரிவுகளுக்கான ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி மகளிர் கிளைகள் புனரமைப்பு கூட்டம் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தேசிய இணைப்பாளரும், கல்முனை மாநகர சபையின் முன்னாள் பிரதி மேயருமான றஹ்மத் மன்சூர் தலைமையில் வியாழக்கிழமை (01) கல்முனையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதி தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எச்.எம். எம்.ஹரீஸ், பிரதி செயலாளர் மன்சூர் ஏ. காதர், பிரதி தேசிய அமைப்பாளரும் கிழக்கு மாகாண முன்னாள் அமைச்சருமான எம்.எஸ்.உதுமாலெப்பை, அம்பாறை மாவட்ட குழுவின் செயலாளரும் கல்முனை முன்னாள் மாநகர சபை உறுப்பினறுமான ஏ.சி.சமால்டீன், கல்முனை மாநகர சபையின் முன்னாள் உறுப்பினர் எம்.எஸ்.எம்.நிஸார், கல்முனை மாநகர சபை முன்னாள் உறுப்பினரான ஏ.கே. கலில் றகுமான், கல்முனை பலநோக்கு கூட்டுறவு சங்கத்தின் தலைவர் ஏ. ஹனிபா மற்றும் முஸ்லிம் காங்கிரஸ் கட்சி முக்கியஸ்தர்களும் கலந்து கொண்டனர்.

# அனர்த்த முகாமைத்துவ முன்னாயத்தகுழு கூட்டம்

(ஹஸ்பர்)

மொறவெவ பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட பனிக்கட்டியா கிராம உத்தியோகத்தர் பிரிவில் எத்தாபந்திய கிராமத்தில் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் முன்னாயத்தக் குழு கூட்டம் நடைபெற்றது.

இந்தக் குழுக் கூட்டத்தில், இயற்கை அனர்த்தங்களின் போது குளங்களின் ஊடாக நீரானது மேலதிகமாக சென்று விவசாய நிலங்கள் மற்றும் குடியிருப்பு காணிகளில் சேதம் ஏற்படுவதைத் தடுப்பதற்கான ஆலோசனைகள் வழற்கப்பட்டன. பங்கு பற்றிய மக்களுக்கு இது தொடர்பில் தெளிவு படுத்தப்பட்டது.

பனிக்கட்டியாவ பிரதேசத்துக்கான கிராம நிர்வாகத் திட்டமும் மேற்கொள்ளப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் திருகோணமலை மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் பிரதிப் பணிப்பாளர் கு.சுகுணதாஸ், கிராம உத்தியோகத்தர் விகும் சன்ஜீவ, விவசாய அபிவிருத்தி உத்தியோகத்தர் ம.ஹேமச்சந்துரு, பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் ம.எமல்ராஜ், அனர்த்த முகாமைத்துவ அபிவிருத்தி உத்தியோகத்தர் தக்ஷன் மற்றும் சமுத்தி உத்தியோகத்தர் சந்திரசிரி எனப் பலரும் கலந்து கொண்டனர்.






# 2026 சட்டப்பேரவை தேர்தல்தான் தமிழக வெற்றி கழகத்தின் இலக்கு



'தமிழக வெற்றி கழகம்' என்ற பெயரில் நடிகர் விஜய், புதிய கட்சி தொடங்கியுள்ளார்.

இந்த நிலையில், எதிர்வரும் 2024 மக்களவை தேர்தலில் தமிழக வெற்றி கழகம் போட்டியிடவில்லை. இந்த தேர்தலில் எந்த கட்சிக்கும் ஆதரவு இல்லை என்றும் நடிகர் விஜய் தெரிவித்துள்ளார்.

2026 சட்டப்பேரவை தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெறுவதுதான் இலக்கு என்றும் அவர் அறிவித்துள்ளார்.

விஜய் மக்கள் இயக்கம் சமீபகாலமாக அரசியல் நிகழ்வுகளில் அதிக ஆர்வம் காட்டி வந்தது. நடிகர் விஜய்யும் பல்வேறு அணி நிர்வாகிகளுடன் அவ்வப்போது ஆலோசனையில் ஈடுபட்டு, இயக்கம் சார்பில் பல புதிய திட்டங்களை செயல்படுத்தி வந்தார்.

இதன் தொடர்ச்சியாக, கடந்த 25 திகதி சென்னை பனையூரில் உள்ள அலுவலகத்தில் மாநில பொதுக்குழு, செயற்குழு கூட்டத்தை கூட்டி, மாவட்ட நிர்வாகிகளுடன் விஜய் ஆலோசனை நடத்தினர். இந்த கூட்டத்தில், விஜய் புதிய கட்சி தொடங்க இருக்கிறார் எனவும் கட்சித் தலைவராக அவரே செயல்படுவார் என்றும் தகவல் வெளியானது.

இந்த நிலையில், டில்லியில் உள்ள இந்திய தேர்தல் ஆணைய தலைமை அலுவலகத்தில் கட்சியின் பெயரை விஜய் மக்கள் இயக்க பொதுச் செயலாளர் புஸ்ஸி ஆனந்த் நேற்று பதிவு செய்தார். அதன்படி, தேர்தல் ஆணையத்தில் விஜய்யின் கட்சி பெயர் 'தமிழக வெற்றி கழகம்' என்று பதிவு செய்யப்பட்டுள்ளது.

இதைத்தொடர்ந்து, கட்சியின் தலைவர் என்ற முறையில்,நடிகர் விஜய் தனது முதல் அறிக்கையை நேற்று வெளியிட்டார்.

விஜய் புதிய கட்சி தொடங்கியதை அடுத்து, தமிழகம், புதுச்சேரியில் உள்ள ரசிகர்கள் கேக் வெட்டியும், பட்டாசு வெடித்தும், மக்களுக்கு இனிப்பு வழங்கியும் கொண்டாடினர்.

புதிய கட்சி உதயமானதை தொடர்ந்து, மாவட்ட தலைவர்களுடன் சென்னையில் விஜய் நாளை ஆலோசனை நடத்த உள்ளார் எனவும் இதில் பல முக்கிய விடயங்கள் தொடர்பில் ஆராயப்படவுள்ளது என்றும் கூறப்படுகிறது.

விஜய்யின் அரசியல் நகர்வுகளை தி.மு.க, அ.தி.மு.க, பா.ஜ.க, காங்கிரஸ் உள்ளிட்ட அனைத்து கட்சிகளும் உன்னிப்பாக கவனித்து வருகின்றன.

இதேவேளை, அரசியல் எனது பொழுதுபோக்கு அல்ல. அது என் வேட்கை. கட்சி பணிகளுக்கு இடையூறு இல்லாத வகையில், நான் ஏற்கெனவே ஒப்புக்கொண்டுள்ள இன்னொரு திரைப் படம் சார்ந்த கடமைகளை முடித்துவிட்டு, முழுமையாக மக்கள் சேவைக்கான அரசியலில் ஈடுபட உள்ளேன்' என்று விஜய் தெரிவித்துள்ளார்.

நடிகர் விஜய் தனது தந்தை எஸ். ஏ.சந்திரசேகர் இயக்கத்தில் கடந்த 1992 இல் வெளியான 'நாளைய தீர்ப்பு' என்ற திரைப்படம் மூலம் தமிழ் சினிமாவில் கதாநாயகனாக அறிமுகமானார். பல வெற்றி படங்களில் நடித்த அவர், அவ்வப்போது தனது நற்பணி மன்றம் மூலம் மக்களுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகளை செய்து வந்தார். பின்னர், நற்பணி மன்றத்தை இயக்கமாக மாற்றினார்.

இலங்கை கடற்படையினரால் தமிழக மீனவர்கள் தாக்கப்படுவதற்கு கண்டனம் தெரிவிக்கும் விதமாக, 2011 ஆம் ஆண்டு நாகப்பட்டினத்தில் பொதுக் கூட்டம் கூட்டினார் விஜய். இக்கூட்டத்தில், தமிழகம் முழுவதிலும் இருந்து ரசிகர்கள் லட்சக்கணக்கில் திரண்டது, திரையுலகில் மட்டுமின்றி அரசியல் கட்சிகள் மத்தியிலும் வியப்பை ஏற்படுத்தியிருந்தது.



# எல்.கே.அத்வானிக்கு பாரத ரத்னா விருது

பா.ஜ.கவின் மூத்த தலைவர்களில் ஒருவரான எல்.கே அத்வானிக்கு பாரத ரத்னா விருது அறிவிக்கப்பட்டுள்ளது என்று பிரதமர் மோடி தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக பிரதமர் மோடி தனது எக்ஸ் பக்கத்தில்,

“ஸ்ரீ எல்.கே. அத்வானி ஜிக்கு பாரத ரத்னா விருது அறிவிக்கப்பட்டுள்ளதை பகிர்ந்து கொள்வதில் எனக்கு மிகவும் மகிழ்ச்சி. நாட்டின் மிகப்பெரிய இந்த கௌரவம் குறித்து அத்வானியிடம் பேசி எனது வாழ்த்துக்களை தெரிவித்தேன்.

நம் காலத்தில் மிகவும் மதிக்கப்படும் அரசியல்வாதிகளில் ஒருவராக, அத்வானி இந்தியாவின் வளர்ச்சிக்கு செய்த பங்களிப்பு மகத்தானது. அடிமட்ட தொண்டனில் தொடங்கி நமது நாட்டின் துணை பிரதமராக உயர்ந்தவர். உள் துறை அமைச்சராகவும், தகவல் தொடர்பு துறை அமைச்சராகவும் சிறப்பாக பணியாற்றினார். அவரது நாடாளுமன்ற விவாதங்கள் முன்னுதாரணமாக இருந்துள்ளன.

தேசிய ஒருமைப்பாடு மற்றும் கலாச்சார மறுமலர்ச்சியை மேம்படுத்துவதற்கு இணையற்ற முயற்சிகளை மேற்கொண்டவர் அத்வானி. அவருக்கு பாரத ரத்னா விருது வழங்கப்பட்ட இந்த தருணம் எனக்கு மிகவும் உணர்ச்சி மிகுந்தது. அவருடன் பழகுவதற்கும், அவரிடமிருந்து கற்றுக்கொள்வதற்கும் எண்ணற்ற வாய்ப்புகள் கிடைத்ததை நான் எப்போதும் எனது பாக்கியமாகக் கருதுவேன்.” என்று குறிப்பிட்டுள்ளார்



# விஜய்க்கு வாழ்த்து சொன்னார் கமல்ஹாசன்

நடிகர் விஜய்க்கு மக்கள் நீதி மையத்தின் தலைவர் கமல்ஹாசன் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் தொலைபேசி அழைப்பை மேற்கொண்டு வெகு நேரம் உரையாடியதோடு, அவர் தனது வாழ்த்துக்களையும் பகிர்ந்துள்ளார்.

தமிழக வெற்றி கழகம் என்ற பெயரில் புதிய கட்சியை நடிகர் விஜய் நேற்றைய தினம் ஆரம்பித்துள்ளார்.

இந்த தகவல் வெளியிடப்பட்டது முதல் வாழ்த்துக்கள் குவிந்த வண்ணம் இருக்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

# ஈராக், சிரியாவில் இலக்குகள் மீது அமெரிக்கா வான்வழித் தாக்குதல்




ஈராக் மற்றும் சிரியாவில் ஈரான் புரட்சிப் படைகள் மற்றும் அதன் ஆதரவு இயக்கங்களுடன் தொடர்புடைய 85 இற்கும் அதிகமான இலக்குகள் மீது அமெரிக்கா நேற்று வான்வழித் தாக்குதல் நடத்தியுள்ளது.

கடந்த வாரம் ஜோர்தானில் நடத்தப்பட்ட ட்ரோன் தாக்குதலில் மூன்று அமெரிக்க வீரர்கள் கொல்லப்பட்டனர். இதற்கு பதிலடியாக இந்த தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இந்த தாக்குதலில் சிரியாவில் 18 தீவிரவாத அமைப்பினர் கொல்லப்பட்டனர் என கூறப்படுகின்றது.

கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மையம், உளவுத்துறை மையங்கள், ரொக்கெட், ஏவுகணைகள், ட்ரோன்கள், வெடி மருந்து சேமிப்புத்தளங்கள் என பல இடங்களைக் குறிவைத்து அமெரிக்க இராணுவம் தாக்குதலை நடத்தியுள்ளது.

இந்த தாக்குதல் தொடங்கப்பட்டதும், "நீங்கள் ஒரு அமெரிக்கருக்கு தீங்கு செய்தால் நாங்கள் அதற்கு பதிலடி கொடுப்போம். ஜோர்தான் தாக்குதலுக்கான பதிலடி நாங்கள் தேர்ந்தெடுக்கும் எந்த இடத்திலும் எந்த நேரத்திலும் தொடரும்" என்று அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் தெரிவித்தார்.

இதுகுறித்த அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

"எங்களுடைய பதில் தாக்குதல் இன்று தொடங்கியுள்ளது. இது நாங்கள் தேர்தெடுக்கும் எந்த இடத்திலும் எந்த நேரத்திலும் தொடரும். அமெரிக்கா மத்தியக் கிழக்கு மற்றும் உலகின் எந்தப் பகுதியிலும் மோதலை விரும்பவில்லை. ஆனால் எங்களுக்கு தீங்கு செய்ய நினைப்பவர்கள், நீங்கள் எந்த ஒரு அமெரிக்க மக்களுக்கு தீங்கு செய்தால் நாங்கள் பதிலடி கொடுப்போம் என்று தெரிந்து கொள்ளட்டும்" என்று தெரிவித்துள்ளார்.

அமெரிக்க இராணுவம் அதன் மிகப் பெரிய தாக்குதலின் முதல் கட்டத்தில், சிரியாவில் 4 இலக்குகள் மற்றும் ஈராகில் 3 இலக்குகள் என 7 இலக்குகள் மீது தாக்குதல் நடத்தியது. நீண்ட தூரம் சென்று தாக்கும் பி-1 பாம்பர்ஸ் உள்ளிட்டவைகள் கொண்டு அமெரிக்க இராணுவம் நடத்திய தாக்குதலில் சிரியாவில் 18 ஈரான் ஆதரவு போராளிகள் கொல்லப்பட்டனர் என பிரித்தானியாவை அடிப்படையாக கொண்ட சிரியாவுக்கான மனித உரிமை கண்காணிப்பு அமைப்பு தெரிவித்துள்ளது.

இதனிடையே, இந்த தாக்குதலுக்கு ஈராக் இராணுவம் கண்டனம் தெரிவித்திருப்பதுடன், இது பிராந்தியத்தின் ஸ்திரத்தன்மையை குலைத்துவிடும் என்று எச்சரித்துள்ளது.

ஈராக் இராணுவ செய்தித் தொடர்பாளர் யாஹ்யா ரசூல் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

"இந்த தாக்குதல் ஈராக்கின் இறையாண்மையை மீறுவதாகும், ஈரான் அரசின் முயற்சிகளை குறைந்து மதிப்பிடும் செயலாகும். மேலும் ஈராக் மற்றும் பிராந்தியத்தின் நிலைத் தன் மையை குலைத்துவிடும் அபாயத்துக்கு ஈட்டுச் செல்லும்" என்று தெரிவித்துள்ளார்.

# கனடா வீடொன்றிலிருந்து மூவர் சடலங்களாக மீட்பு

கனடாவில் வீடொன்றிலிருந்து மூவரின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன. இந்த சம்பவம் அங்கு பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

ரொறன்ரோ ரிச்மண்ட்ஹில் என்ற பகுதியில் மெக்கேய் வீதி யாங் வீதி அமைந்துள்ள வீடொன்றிலிருந்தே இந்த சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடந்த வியாழன் மாலை 4:15 மணியளவில் பொலிஸாருக்கு கிடைத்த



தொலைபேசி தகவலை அடுத்து சம்பவ இடத்திற்கு சென்ற அவர்கள் மேற்படி வீட்டை சோதனையிட்டபோது இந்த சடலங்களை கண்டுபிடித்துள்ளனர்.

இவ்வாறு சடலங்களாக மீட்கப்பட்டவர்களின் விபரங்கள் எதுவும் வெளியாகவில்லை. மரணத்திற்கான காரணம் பிரேத பரிசோதனை அறிக்கை வெளிவந்த பின்ரே தெரியவரும் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் ஏதாவது தகவல் தெரிந்தால் அதனை தெரிவிக்க முன்வருமாறு பொதுமக்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள் என்று பொலிஸ் தெரிவித்துள்ளது.

# ஜேர்மனியில் வேலைநிறுத்த போராட்டம்

ஜேர்மனியில் போக்குவரத்து தொழிலாளர்கள் ஒருநாள் அடையாள வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டதால் மக்கள் பெரும் அவதிக்கு உள்ளாகியனர் என சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

15 மாகாணங்களில் 130 நகராட்சி பொதுப் போக்குவரத்து நிறுவனங்களைச் சேர்ந்த சுமார் 90 ஆயிரம் தொழிலாளர்கள் இதில் பங்கேற்றுள்ளனர்.

இதனால் அந்த நாட்டிலிருக்கும் பெரும்பாலான பொது மக்கள் தங்களுடைய அன்றாட வேலைகளை பூர்த்தி செய்வதில் சிரமத்தை எதிர்கொண்டனர் என தெரிவிக்கப்படுகிறது.

போக்குவரத்து நிறுவனங்களின் புதிய விதிமுறைகளை கண்டித்தே இந்த போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, சில தினங்களுக்கு முன் ரயில் ஊழியர்கள் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்ட நிலையில், நேற்று முன்தினம் விமான நிலைய ஊழி



யர்களும் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டதால் 1,100 விமான சேவைகள் நிறுத்தப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது.



# பாலமுனையில் இரத்ததான நிகழ்வு

(எம்.எப்.நவாஸ்)

பாலமுனை இளைஞர்கள் சபையின் ஏற்பாட்டிலும் மெமன் எயிட் அமைப்பின் அனுசரணையிலும் இரத்ததானம் செய்யும் நடவடிக்கையும் இரத்ததானம் செய்தவர்களுக்கு உலர் உணவுப் பொதிகள் வழங்கி வைக்கும் நடவடிக்கையும் பாலமுனை மஹாசினுல் உலூம் இஸ்லாமியக் கல்லூரி மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றன.

பாலமுனை இளைஞர்கள் சபையின் தலைவர் ஏ.எல்.சீத் தலைமையில் இரத்ததானம் செய்யும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. இதில் பலர் கலந்துகொண்டு இரத்ததானம் செய்தனர்.



# ‘புதிய தேசம் அமைப்போம்’ திட்டத்தில் மட்டக்களப்பில் மரக்கன்றுகள் வழங்கல்

(ந.குகதர்சன் )

நாட்டின் சுதந்திர தினத்தை முன்னிட்டு உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் சுற்று நிரூபத்துக்கேற்ப புதிய தேசம் அமைப்போம் என்னும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் பயன்தரும் மரக்கன்றுகள் வழங்கும் நிகழ்வு மட்டக்களப்பு திறாய்மடுவில் மாவட்ட மேலதிக அரச அதிபர் திருமதி சுதர்சினி ஸ்ரீகாந்த் தலைமையில் இடம் பெற்றது

எதிர்கால சந்ததியின் நலனைக் கருத்தில் கொண்டு இந்த மரக்கன்றுகள் வழங்கும் நிகழ்வு இடம் பெற்றது. இந்த நிகழ்வில் மாவட்ட அரச அதிபர் திருமதி முரளிதரனும் கலந்து கொண்டு மரக்கன்றுகளை வழங்கினார்.





# மண்முனை பிரதேச செயலகத்தில் உழவர் பொங்கல் விழா நிகழ்வுகள்

(வவுணதீவு எஸ்.சதீஸ்)

மட்டக்களப்பு, மண்முனை மேற்கு பிரதேச செயலகத்தின் உழவர் திருநாள் பொங்கல் விழா வவுணதீவு ஸ்ரீ பத்திர காளி அம்மன் ஆலயத்தில் நேற்று வெள்ளிக்கிழமை பிரதேச செயலாளர் திருமதி சத்தியானந்தி நமசிவாயம் தலைமையில் நடைபெற்றது.

முதல் நிகழ்வாக பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் தலைமையி லான விவசாயிகள் உள்ளிட்டோரால் நெல் அறுவடை செய்யப்பட்டு, பொங் கலுக்கான பூசைப் பொருட்களுடன் ஆலயத்துக்கு எடுத்துவரப்பட்டது. இதனை அடுத்து, பாரம்பரிய கலாசார முறைப்படி நெல் அரிசியாக்கப்பட்டு பொங்கலுக்கான ஏற்பாடுகள் செய் யப்பட்டன.

தொடர்ந்து, பிரதேச செயலாளர் தலைமையில் பொங்கல் பொங்கல் பானை ஏற்றப்பட்டதையடுத்து, இந்தப் பிரதேசத்திலுள்ள 24 கிராமங்கள் சார்பாகவும் 24 பொங்கல் பானைகள் வைத்து பொங்கல் இடம் பெற்றது.

இதன் போது 24 கிராம மட்ட அமைப்புக்களும் பிரதேச செயலக உத்தியோகத்தர்களும் பொங்கல் பொங்கி விழாவில் கலந்து கொண்டனர்.

சூரிய பகவானுக்கும் உழவருக்கும் நன்றி கூறும் வகையில் இடம்பெற்ற இந்த நிகழ்வின் போது, இங்கு அமைக்கப்பட்டிருந்த கலை அரங்கில் விவசாயத்தை பிரதிபலிக்கும் நடனங்கள் உள்ளிட்ட கலை நிகழ்வுகளும் பாரம் பரிய விளையாட்டுக்களும் இடம்பெற் றன.









